**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 17-02-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-02-17 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-02-18 | 2023-02-19 | 2023-02-20 | 2023-02-21 | 2023-02-22 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 30.0 | 31.0 | 31.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 21.0 | 21.0 | 22.0 | 22.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 90 | 90 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 4.0 | 4.0 | 10.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 70 | 50 | 50 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் வறண்ட வானிலையாக காணப்படலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 4.0-10.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும் ; காற்றின் திசையானது கிழக்கு வடகிழக்கு முதல் வடக்கு வடகிழக்கு நோக்கி வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 30.0°C-32.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 21.0°C-23.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 80-90%-ஆகவும் மற்றும் மாலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 30-40%-ஆகவும் காணப்படலாம்.

## பொது ஆலோசனை:

22.02.2023 முதல் 28.02.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பை விட குறைவாகவும், மற்றும் அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் வறண்ட வானிலையாக காணப்படுவதால் விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து பயிர்களுக்கு நீர் பாசனம் மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நவரை பட்டம்- நெல்- நாற்றங்கால் நிலை முதல் வேர் தூர் கட்டுதல் நிலை- 1. இலைப்பேன்- 20 சென்ட் பரப்பு கொண்ட நாற்றங்காலுக்கு தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் வீதம் 40 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 2. தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3. பசும் பாசி வளர்ச்சி- ஏக்கருக்கு காப்பர் சல்பேட் 1 கிலோ கிராம் வீதம் பாசன நீரில் கலந்து விடவும்; 3. குலை நோய்- ஏக்கருக்கு ப்ராபிகோனசோல் 75 WP @ 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது ட்ரைசைக்ளோசோல் 2 கிராம் / லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்; 4.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | சுருள்பூச்சி- ஏக்கருக்கு மெத்தில் டெமெக்டோன் 25 EC 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இரவு 8 முதல் 11 மணி வரை விளக்கு பொறியினை ஒளிர செய்து கவர்ந்து அழிக்கலாம். |
| உளுந்து | மஞ்சள் தேமல் நோய் - ஏக்கருக்கு 5 முதல் 6 மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியினை அமைக்கலாம்; நோய் தாக்கப்பட்ட பயிரினை களைந்து அழிக்கவும்; இலை வழி தெளிப்பாக நொச்சியிலை சாறு 10 சதம் அல்லது வேம்பிலை சாறு 5 சதம் 30 நாட்கள் விதைப்பிற்குபின் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | இலைப்பேன்- இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.சாம்பல் நோய்- நோயின் அறிகுறி கண்டவுடன் 15 நாட்கள் இடைவெளியில் நனையும் கந்தகம் (wettable sulphur) @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் என்ற வீதம் அல்லது பிப்ரோனில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து மூன்று முறை வீதம் தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | 1.சிற்றிலை அல்லது சிறு இலை நோய்- டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம்; 2.காய்த் துளைப்பான்- வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.மற்றும் ப்ரைஸ்டோமரஸ் டெஸ்டுசியஸ் மற்றும் செராமஸ்டஸ் பெலவோரிப்டெலில் ஒட்டுண்ணியைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். |